[27th July 1957

SRI A. VEDARATHNAM PILLAI : கரும்பு சாகுபடி நெல் விளைச்சலை பாதிப்பது தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் தானா ? அல்லது இதர ஜில்லாக் களிலும் இந்த மாதிரி பாதிக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கரும்புச் சாகுபடி நெல் விளைச்சலை பாதிக்கவில்லையென்று தான் சொன்னேன். இதனால் இந்தக் கேள்வி எழுவதற்கே இடமில்லை.

SRI K. ANBAZHAGAN : ஆரூரான் சர்க்கரை ஆலை ஆரம்பித்ததற்குப் பின்னர் நெல் விளைந்த பல பகுதிகளை கரும்பு சாகுபடிக்கு மாற்றுகிறார்கள். மேலும் சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது. இதனால் இன்னும் பல நெல் விளையும் பகுதிகள் கரும்புக்கு மாற்றப்படும். இதை சர்க்கார் வரவேற்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி இன்னும் சில ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நெல் பயிரிலிருந்து கரும்புக்கு மாற்றப்படுவதில சர்க்கார் கவலைப்படவில்லை. கரும்புப் பொருளும் நமக்கு வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கும் விவசாயம் கட்டுபடியாகவேண்டுமென்றால் நெல் பயிரையே வைத்துக்கொண்டிருந்தால் பலன் அளிக்காது. அப்போதைக்கப் போது ரொடேஷன் ஆப் கிராப்ஸ் வேண்டும். கரும்பு சாகுபடி செய்வதை வரவேற்கிறோம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : நெல் விளையக்கூடிய நஞ்சை நிலத்தில் தான் கரும்பு விளைவிக்கமுடியுமென்று அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் தெரியும். இதில் இவ்வளவு கவலை கொள்ளாமல் இருக்கக்கூடிய நிலங்களின் பேரில் இன்னும் கவனம் செலுத்தினால் விளைச்சலை இரட்டிப்பாக்கலாம். கரும்பு உற்பத்தி யாவதைப் பற்றி அங்கத்தினர் கவலை கொள்ளவேண்டாமென்று தான் சொல்லுகிறேன்.

List of successful graduate and non-graduate teachers.

MR. SPEAKER : As the hon. Member Sri M. William is not in his place, the question No. 301 and answer will be printed in the proceedings.

* 301 *Q*,—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state weather the Government have received the lists of successful graduate and non-graduate teachers selected by the former Travancore-Cochine State Public Service Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

Scaling down of the sales-tax.

* 302 *Q*.—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any instructions from the Union Food Minister or from the Central Government regarding the scaling down of the sales tax on food articles; and

(*b*) if so, the details of the instructions and the action taken in pursuance thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No such instructions have been received.

(*b*) Does not arise.

Harijan Welfare schools.

* 303 *Q.*— SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have decided to stop opening of Harijan Welfare schools in future; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government took a policy decision in August 1955 that no separate Harijan Welfare schools should be opened in future as the provision of separate schools for Harijan children tend to isolate the community resulting in its segregation.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஹரிஜன க்ஷேமநலப் பள்ளிகளில் பகல் உணவு கொடுக்கிற காரணத்தால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் படிக்க வசதி இருக்கிறது. எதிர்காலத்தில் இந்தப் பள்ளிகளை திறக்கக்கூடாது என்று அரசாங்கம் முடிவு கட்டிவிட்டதால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பள்ளிகளுக்குப் போகமுடியாத நிலை இருக்கிறது. இது ஹரிஜன முன்னேற்றத் திட்டங்களுக்கு முற்றிலும் முரணாக இருப்பதால் இதை மாற்றிக்கொள்ள சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : தனியாக ஹரிஜன் வெல்பேர் ஸ்கூல் வைத்து அதில் படிக்கும் மாணவர்களுக்கு சாப்பாடு போடப்பட்டுவந்தது. இப்போது வேறு பள்ளிகளிலும் சாப்பாடுபோடும் விஷயத்தைப் பற்றி கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI P. G. MANICKAM : வரப்போகும் திட்டத்தில் மத்தியான உணவு ஒரு சில இடங்களில் கொடுக்கப்படப் போவதாகத் தெரிகிறது. எல்லா இடங்களிலும் கொடுக்கப்போவதாகத் தெரியவில்லை. ஹரிஜனப் பிள்ளைகள் எந்தெந்தப் பள்ளிகளில் படிக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கு சாப்பாட்டுச் செலவுக்கு " பாக்கெட் மணி " கொடுக்க கவர்ண்மெண்டார் வழி செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : " பாக்கெட் மணி " கொடுப்பது என்பது முடியாது. ஆனால் இதர ஸ்கூல்களில் படிக்கும் மாணவர்களுக்கும் சாப்பாடுபோட ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஹரிஜன பிள்ளைகளுக்கு மத்தியான உணவு அளிப்பதைப் பார்த்தால் அவர்களுக்கு ஒரு வேளைக்கு $2\frac{1}{4}$ அல்லது $2\frac{1}{2}$ அணா வீதம் செலவாகிறது. இன்னும் சில சமயங்களில் சாமான்களின் விலை அதிகமாயிருப்பதால் அதிகமாகச் செலவாகிறது. குறைவாகவும் செலவாகிறது. இப்பொழுது சாமான்களின் விலை அதிகமாக இருப்பதால் இப்பொழுது கொடுக்கப்படும் தொகையாகிய $2\frac{1}{2}$ அல்லது 3 அணாவுக்கு மேல் ஆனால் அந்த அதிகத் தொகையை கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது அரசாங்கம் இருக்கக்கூடிய நிலைமையில் அப்படிக் கொடுக்கமுடியாது.

MR. SPEAKER : இன்னும் 15 நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு மற்ற கேள்விகளையும் முடித்துவிடுகிறேன். இதற்கு சபை அனுமதிக்கும் என்று நம்புகிறேன்.